அருள்மிகு பறாளை ஈசுரவிநாயகர்
திருக்கோவில்

# திருக் குடமுழுக்கு மலர்



வெளியீடு - 7

அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோவில்
அறங்காவலர் சபை
சுழிபுரம்

2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று

கற்கோவில் கண்டவன் தமிழன். அதைக் கலைக் கோவிலாக அழகுற ஆக்கியோன் தமிழன். உலக ஆன்மாக்கள் பரமாத்மா வோடு இலயிக்க வழிவகுத்தவனும் தமிழனே. இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் சுழிபுரம் வாழ் மருதநில மக்களுக்காக அந்நாள் அரசனான கதிர்காமசேகரன் இந்த விநாயகர் ஆலயத்தை கட்டினான். அடுத்து வந்த அரச பரம்பரையினரும் 1920ம் ஆண்டு வரையும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வந்தனர். மன்னர் ஆட்சி முறைமை அற்ற பின்னரும், சுழிபுரம் வாழ் மக்கள் விளைநெல்லை காணிக்கையாக செலுத்தி வந்தமை வரலாறு. ஆலயங்கள் மக்களது மனம் இறைவனிடம் இலயித்து, அவன் அருட் பிரசாதத்திற்கு ஆளாவதற்காக அமைக்கப்பட்டவை. இன்று பெரும்பாலான இந்து ஆலயங்கள் தரமற்ற அறங்காவலர்களின் போட்டி பொறாமைகளால் நித்திய பூசைகள், நடவாது மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஆயினும் மன்னன் ஆட்சிக்குப் பின் இக் கோவில் நிர்வாகத்தை ஏற்ற அறங் காவலர்கள், அறம் பிறழாது இது நாள் வரை பல இடர்ப்பாடுகள், வஞ்சனைகள், மத்தியிலும் சிறப்பா கத் திருப்பணி செய்து குடமுழுக்கும் செய்திருப்பது போற்றுதற் குரியது. ஊர் மக்களும் வழிபடுவோரும் தம்மை அடியவர்களாக மட்டுமே பாவித்து வழிபாடு செய்ய வேணடும், ஐயர்மார் மறை ஓதுவதும், இறை பூசை செய்வதும், அறம் உரைத்து மக்கள் அகவிருள் போக்குவதும் மட்டுமே தமது கடமை என்று உணர்ந்து பணிசெய்ய வேண்டும், அறங்காவலர் சபையினரும் கோவிலை பொருளீட்டும் வர்த்தக மையமாகக் கொள்ளாது மக்கள் சேவைக்காக ஆக்கப்பட்ட தளமாகக் கொண்டு ஊர்மக்களுக்கு சகல வழிகளிலும் உடல் உள ஆன்மீக மேம்பாட்டை அளிக்கும் வகையில் ஒற்றுமையாக நிர்வகிக்க வேண்டும். சுருக்கமாகவும் சிறப்பாகவும் கூறவேண்டுமானால் ஆலயங்கள் மடாலயங்களின் பணியை இன்று ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

திருவருளின் அருட்பேறு யாவர்க்கும் கிடைப்பதாக.

தவத்திரு சிவகுருநாதன் அடிகள்

உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி அடியார்க்கடியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர் ராச மதிப்பிற்குரிய இராசா. வ. ஆறுமுகம்

ஆதீனகர்த்தா (பெரியபரிகாரியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம்வா ழைங்கரன்கோவில்
பல்வளஞ்சேர் குடமுழுக்கைப் பாடவே - வில் வழங்கு
மையாழிக் கண்ணன் மலர்க்கண் வளர்ந்திருக்
கையாழிக் கண்ணனே காப்பு

## துதி

### விநாயகர்

நந்து தவழ நதிதனி லாம்ப னனிமலருஞ்
சுந்தரஞ் சேரும் பழனப் பறாளை யிற் றோன்றுசுடர்
வந்தெதிர் நின்ற கயமுகன் றன்னை வதைத்தந்த
வைந்து கரப்பிள்ளை யென்னகத்தே நின்றருள் செயுமே

### நடேசர்

சுருதி யின்முத லாகிய காரணர்
துளைபொ லிகர வாரண மாமுகர்
சுழிபுர நகர் மேவுப றாளையி லுறைநாதர்
கரும ணிவிழி யாளுமை பாலகர்
கதிரை யின்வடி வேலர்ச கோதரர்
கருணை யின்மத தாரையி னார்பளி னிசையோதச்
செரும ருவுத்ரி சூலவ ராயுதர்
திரிதி ரிபுர கோபர நாமயர்
திகழி ரணிய மேருச ராசனர் பணிநாணார்
பொருமு ழுவையி னீருரி யாடையர்
புரிச டைவளை மலிசம் பேச்சுரர்
பொவி னிடட மாடிய சேவடி மறவேனே

### சிவகாமியம்மை

தோட்டு வாரிச நான்முகன் பேணிய
தும்பி மாமுக னம்புவி தாங்கிய
சேட்டு மேருவிற் பாரதந் தீட்டிய
தென்ப றாளைப் பரஞ்சோதி யன்னை
கோட்டு வாரணிகொங்கைப் பெருக்குங்
குழற்சு ருக்கு மணிவாய் முருக்கும்பஞ்
சூட்டு சீறடி யுந்துடி நேரிடை
யுடையு மெங்கணு மென்கணி னின்றவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறங்காவலர் சபையின் செய்தி

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.
வெள்ளிக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே.

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலை ஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

விக்கினங்களுக்கு ஈசனே, ஈசுரவிநாயகா, துன்பங்களிலிருந்து எம்மை காப்பவனே, தும்பிக்கையானே, துயர்களைத் தீர்ப்பவனே, நம்பித் தொழு வோர்க்கு நாயகனே, உன்தாள் சரணம்.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளால் கோவிலைப் புதுப்பித்துக் கட்டி குடமுழுக்கை நிறைவு செய்துள்ளோம். அறங்காவலர் சபையின் சொந்தப் பணத்திலும் ஆதீனகர்த்தா இராசா ஆறுமுகன் குடும்பத்தினர் ஆதரவிலும் கோவில் புதுப்பித்துக்கட்டப்பட்டுள்ளது.

விநாயகன் திருவருட்கடாட்சம் எங்கும் நிறைவதாக. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யன்றி வேறொன்றறியேன் பராபரமே. நாடு செழிக்க, மக்கள் நல்வாழ்வு பெற ஈசுரவிநாயகன் கருணை கிடைததுள்ளது.

ஆலயம், அறச்சொத்துக்கள், தேர், ஆதனங்கள் எல்லாம் அறக் கட்டளைக்கு உரியவையாகும். அறக்கட்டளையின்படி அதனைப் பராபரித்து வருவது அறங்காவலர் சபையாகும். இச்சபை 1994ல் திருக்கோவில் வரலாறு, 1998ல் பறாளை விநாயகர் பள்ளு என்னும் நூல்களை வெளியிட்டது. இப்போது இம்மலரினை தனது ஏழாவது வெளியீடாக விநாயகன் திருப்பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்றது.

| | |
|---|---|
| திரு.செ.மயில்வாகனம் | திரு.சு.இராசசேகரம் |
| தலைவர் | துணைத் தலைவர் |
| திரு.பூ.பத்மநாதன் | பேரறிஞர் வைத்தியகலாநிதி க.பாலசுப்பிரமணியம் |
| துணைத் தலைவர் | கௌரவ செயலாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ. மயில்வாகனம்
தலைவர்



சு. இராசசேகரம்
துணைத்தலைவர்



க. பாலசுப்பிரமணியம்
கௌரவ செயலாளர்

# நாட்டு வளம்

மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ் சூழ
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
யன்ன வன்னக் குழாம் விளையாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்களோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
மீழ மண்டல நாடெங்க ணாடே

பைப்ப ணிப்பகு வாய்பட்ட திங்களிற்
பாயு மோதக் கடற்கரை தோறு
மிப்பி வாயிலின் முத்த மிலங்கிய
வீழமண்டல நாடெங்கணாடே

பரப்பு மேகலை மங்கையர் போகம்
பயில வேண்டி யிணங்கார் முகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிரப்ப தேயன்றி வேறிரப் பில்லாத
வீழமண்டல நாடெங்க ணாடே
பண்ணிற் றோயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழமண்டல நாடெங்க ணாடே

ஆட்டு முசலி னாடுமின் னார்பொன்
னணிகலத்தின் மணிதெறித் தோடி
யேட்டுக் காவிற் குயிற்றுயின் மாற்றிடு
மீழமண்டல நாடெங்க ணாடே
சிந்து ரத்துணை புள்ளு ரயன்பணி
தென்ப றாளைப் பரஞ்சோதி நாத
தந்தி யேறிய வாகனந் தின்று
சமைந்த நெற்கோட்டை யாயிரங் காணுங்
வந்த பாவலர் வெங்கலி தீர
வழங்குங் கோட்டையோ ரைந்நூறு காணும்
இந்த நாளினி லென்பொரு ளாய்வைத்
திருந்த தோர்வட்டுக் கோட்டை யொன்றாண்டே

தேன் கிடந்த தொடையானே தேடரிதாங் கண்மணியே
வான் கிடந்த புகழானே மலைகிடந்த தோளானே
யூன் கிடந்த மெய்தளர்ந்தே யோவியம்போல
வயலணையில்
ஏன் கிடந்தா யென்னகுறை யின்னதென்று சொல்லாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபு வ.த. முதலியார் அறங்காவலர் சபை முன்னாள் தலைவர்



விநாயகரும் பூசகரும் சி. பிறைசூடிக்குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறங்காவலர் சபைச் செயலாளர்
பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்
பாலத்தாபனத்தின் போது மூல மூர்த்தியுடன் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவில் புதுப்பித்துக் கட்டல்

அறங்காவலர் சபை ஆலயத்தில் ஏற்பட்ட சேதங்களை நீக்கவும், சிதைவுகளை அகற்றவும், மீளப் பிரித்து புதுப்பித்துக் கட்ட இணங்கியது. அதற்கான செலவை அறங்காவலர் சபையினரும், ஆதீனகர்த்தா, ராசா ஆறுமுகம் குடும்பத்தினரும பகிர்ந்து கொள்வது என்றும் வெளியாரிடம் பணம் பெற்றுக் கொள்வதில்லை என்றும் இணங்கப்பட்டது. அதற்கான நடவடிக்கை அறங்காவலர் சபை சார்பாக கௌரவ செயலாளர் பேரறிஞர் வைத்திய கலாநிதி க.பாலசுப்பிரமணியம் மேற்கொண்டு தேவையான பணத்தைத் திரட்ட ஆறுமுகன் குடும்பத்தவருடன் ஏற்பாடு செய்தார். அத்தோடு பாலத்தாபனம் செய்வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டது.

## பாலத்தாபனம்

அறங்காவலர்கள் 08.11.2002 அன்று பாலத்தாபனம் செய்வதற்கு இணங்கினார்கள்.அறங்காவலர் சபை சார்பாக செயலாளர் பாலசுப்பிரமணியமும், கயிலாயநாதனும் சேர்ந்து அன்று பாலத்தாபனம் செய்து பாலாலய முழுக்கும் ஆளுக்கு இரண்டாயிரமாக ரூபா நாலாயிரம் செலவழித்துச் செய்யப்பட்டது. அராலியூர் சிற்பாசாரி யோகேசுவரன் அவர்களினால் நாள் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. கோவில் முற்றாக பிரிக்கப்பட்ட பின்னர் செயலாளர் பாலசுப்பிரமணியத்தினால் சிற்பாசாரியருக்கு ரூபா முப்பதினாயிரம் முற்பணமாக் கொடுத்து கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆதீனகர்த்தா ஆறுமுகம் குடும்பத்தினரின் ஆதரவிலேயே கோவில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. மொத்தக் கட்டிடச் செலவு ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் சிற்பாசாரியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் வசிக்கும் அறங்காவலர் சபை துணைத் தலைவர் பிரபு சு. இராசசேகரம் ரூபா இருபதினாயிரம் வழங்கினார். அவர் மகள் டத்தின் டாக்டர் கணேசுவரி, மருகர் டத்தோ டாக்டர் சுப்பிரமணியம் பாலன், பேத்தி ரூபிணி, அவர்களினால் ரூபா இருபத்தாறாயிரத்து அறுபத்தொன்று வழங்கப்பட்டது. இப்பணத்திலே கட்டிடத்திற்கு முற்பணம் ரூபா முப்பதினாயிரம் வழங்கப்பட்டது. அறங்காவலர் சபையின் முன்னாள் தலைவர் வைத்திய சிரோமணி பிரபு வ.த.முதலியார் மகன் த.உலகநாதன், ரூபா ஒரு லட்சம் வழங்கியிருந்தார், தந்தையின் இடத்திற்கு தம்மை அறங்காவலராக சேர்த்துக் கொள்ளுமாறு செயலாளரை கேட்டிருந்தார். அறங்காவலர் பா.உருத்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா எண்ணாயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டு வழங்கினார். செயலாளர் பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் ரூபா பத்தாயிரம் வழங்கினார். மலர்ச் செலவு ரூபா பதினேழாயிரம்.

அறங்காவலர் பூ. கயிலாயநாதன் சபை சார்பாக பெற்றுக் கொண்ட பணத்திற்கான கணக்கை இன்னும் ஒப்படைக்கவில்லை. ஆதலால் முழுக் கணக்கினையும் வெளியிட முடியவில்லை. அடியார்களும் தமது நேர்த்திக்காக இராசகோபுரம், உள்வீதி கொட்டகைகளின் ஒரு பகுதி, தெற்குவாசல் கோபுரம் முதலியவற்றைத் திருப்பணியாக செய்து முடித்துள்ளார்கள்.

## ஆலய மீளமைப்பு திருக்குட முழுக்கு

நிகழும் சுபானு வருடம் ஆனித் திங்கள் 26ம் நாள் வியாழக் கிழமை (10.7.2003) அனுச நட்சத்திரமும் பூர்வ பட்ச துவாதசி திதியும் சித்த யோகமும் பவகரணமும் சுக்கிர ஓரையும் கூடிய சிங்க லக்கின சுபமுகூர்த்த வேளையில் தூபி முழுக்கும், பெரும் குடமுழுக்கும் சிவாச்சாரியார்களினால் சிறப்பாக நிறைவேற்றி வைக்கப்பட்டன.

ஆனித்திங்கள் 22ம் நாள் ஞாயிற்றுக்கிழமை கருமாரம்பம் நடைபெற்று கிரியைகள் தொடர்ந்து இடம் பெற்றன.


ஆனித்திங்கள் 25ம் நாள் புதன் கிழமை தூபி தாபனம், தீபத்தாபனம், இயந்திர தாபனம், பிம்பத்தாபனம், அட்டபந்தனம், பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்துதல் முதலியன நடைபெற்றன.

ஆனித்திங்கள் 26ம் நாள் காலை 6.00 மணிக்கு யாகபூசை, அந்தர்பலி, பகிர்பலி, தானாதிகள், கும்ப வீதி பிரதட்சணம் என்பன நடைபெற்றன. காலை 8.45மணிக்கு தூபி முழுக்கும், இராசகோபுர கலச பிரதிட்டையும், நடைபெற்றன. அடியார்களின் பக்தி கோசங்களுடனும் சங்கு, சேமக்கலம், மங்கல வாத்தியம் முழங்க சிவாச்சாரியார்கள் வேத மந்திரம் ஓதக் காலை 9.30 மணியளவில் ஈசுரவிநாயகமூர்த்திக்கு திருக்குட முழுக்கு சிவாச்சாரியர்களினால் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டது. மாலை வசந்தமண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா நடைபெற்றது. அன்று மக்களுக்கு மகேசுர பூசையும் நடைபெற்றது. விநாயகன் திருவருட் கடாட்சத்தினால் எல்லாம் இனிதே நிறைவு பெற்றன.

விநாயகர் கருணையை சொல்லவும் அரிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கர்ப்பக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர் இராச மதிப்பிற்குரிய இராசா த. சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடமுழுக்கின் சித்தாந்தம்

இறைவன் ஒலி, ஒளி வடிவமாய் இருக்கிறான். ஐம் பூதங்களில் உலகெங்கும் வியாபித்துள்ளான். அருவ வடிவில் உள்ள இறைவனை உருவ நிலைக்கு கொண்டு வருவதே குடமுழுக்கின் சித்தாந்தமாகும்.

ஆகாசத்தில் (வெளி) அருவ நிலையிலுள்ள இறை சக்தியை மந்திர ஒலி (வளி) களினாலும், தீ (தீ) யினாலும், கும்பத்தில் (நீருக்கு ) கொண்டு வரப்படுகிறது. அந்தப் புனித நீரை, சிலைக்கு (மண்) முழுக்காடும் போது, சிலையில் இறை சக்தி உண்டாகிறது. அதாவது வெளி, வளி, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களிலுள்ள இறை சக்தியை ஒன்று திரட்டி உருவமாக இறை சக்தியை காண்பதற்கு குடமுழுக்கு செய்யப்படுகிறது.

## ஈசுரவிநாயகர் கீர்த்தி

ஈழமண்டல மணித்திருநாட்டின் வடபாகம் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலே நாகநாடு என அழைக்கப்பட்டது.உலகிற்கு நாகரிகத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் .நாகநாட்டின் தமிழர்களே. முதற் சங்க காலத்திற்கு முன்பிருந்தே நாகநாடு மணிபல்லவம் என அழைக்கப்பட்டது. மணிபுரம் மணிபல்லவத்தின் இராசதானியாக விளங்கியது. மணி பல்லவத்தின் மன்னர்களை புலவர்கள் பல்லவ அரசர் என்றே அழைத்தனர். பல்லவ மன்னர்கள் பல்லவ ராச்சியத்தை ஆட்சிசெய்து வந்தனர். வடநாட்டு மூவேந்தர்கள் பல்லவராச்சியத்தை தாக்கியும் அழித்தும் வரலானார்கள். கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் தென்னிந்தியா மூன்று நூற்றாண்டுகள் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பல்லவ அரசர்கள் மலயநாடு, சம்பாநாடு, சாவகம் போன்ற கீழைத்தேய நாடுகளையும் ஆட்சி செய்தார்கள் என அங்குள்ள கல்வெட்டுக்களினால் அறிய முடிகின்றது. பெருந் தொகையான ஆலயங்களை சிற்பச் சிறப்புக்களுடன் பல்லவ மன்னர்கள் இலங்கை, இந்தியா, கீழைத்தேய நாடுகளில் கட்டினார்கள்.

பத்தாம் நூற்றாண்டளவில் மணிபல்லவத்தைக் கைப்பற்றி சோழ மண்டலத்துடன் இணைத்து மணிபுரத்திற்கு சோழியபுரம் என பெயரிட்டு சோழர் ஆட்சி செய்தனர். ஆனால் பதினோராம் நூற்றாண்டில் சேகர அரச குடும்பத்தின் இராசசிங்கன் மணிபல்லவத்தை மீட்டு சிங்கை நகரினை (சங்கை நகர், சங்கானை) இராசதானியாக்கி மீண்டும் தங்கள் ஆட்சியின் கீழ கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ம் நூற்றாண்டில் நல்லூரில் பேரரசனாக விளங்கிய பரராசசேகரன் பட்டத்து ராணியின் மகன் கதிர்காமசேகரனுக்கு இளவரசு பட்டம் கட்டினான். காமக் கிழத்திக்கு பிறந்த சங்கிலி தமக்கு அரசுரிமை கிடைக்காது என்றதால் சதிசெய்து அரசைக் கைப்பற்ற எண்ணினான். முறையற்ற வாரிசுகள் முறையற்ற விதமாக நடப்பதில் ஆச்சரியமில்லை. பிறப்பைப் போலவே குணங்களும் மாறுபடுவதனால் ஆண்டவன் சொத்துக்களையே அபகரிக்க முயல்வார்கள். அறங்காவலர்களின் உரிமைகளையே கைப்பற்ற முனைவார்கள். சமயம் பார்த்துத் தப்பான ஆசைகளை நிறைவேற்றப் பார்ப்பார்கள்.

பரராசசேகரன் வன்னியில் கலகத்தையடக்க கதிர்காமசேகரனை அனுப்பினான். சமயம் பார்த்திருந்த சங்கிலி தந்தையைச் சிறையிலிட்டு செங்கோலும் முடியும் இன்றி சிம்மாசனம் ஏறினான். வெற்றியுடன் மீண்ட கதிர்காமசேகரன் தந்தை சொற்படி பழைய ராசதானியாகிய சுழிபுரத்திற்கு சென்று வீமராசன் கொல்லை என்ற நந்தவனத்தில் வாழ்ந்து வந்தான்.

## தமிழரசர்களும் விநாயகரும்

வடக்கே இராவணேசுவரனால் கட்டப்பெற்ற சம்பேசுவரம் என்கின்ற சிவாலயம் அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. தெற்கே பொன்னாலையில் மாயவன் கோவில் கொண்டுள்ளான். மேற்கே மணிவண்ணன் பாதம் பதிந்த திருவடிநிலை தீர்த்தச் சிறப்புடன் உள்ளது. கிழக்கே சோலைகளும் கழனிகளும் நிரம்பிய சுழிபுர நகரிலே விநாயகப் பெருமானை தன் காவற் தெய்வமாக இளவரசன் கி.பி. 1520 ம் ஆண்டளவில் பறாளையில் தாபித்து வழிபட்டு வரலானான். பரராசசேகரனும் சிறையிலிருந்து தப்பியோடி சுழிபுரத்திற்கு வந்து கதிர்காமசேகரனுடன் தங்கினான். இருவரும் விநாயகரை வழிபட்டு வரலானார்கள். பறாளை மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புப் பெற்ற தலமாகும். தமிழ் அரசர்களால் ஆதியில் ஆலயம் கட்டப்பெற்றதை பறாளை விநாயகர் பள்ளு தெரிவிக்கிறது. கதிர்காமசேகரன் மகன் ராசமகாராசா தமது ஆட்சிக் காலத்தில் (1561-1569)கோவில் திருப்பணிகளை நிறைவேற்றினான். கதிர்காமசேகரனின் இளைய மகன் புவிராசபண்டாரம் தம் ஆட்சியின் போது (1570-1590) கோவில் திருப்பணிகளைச் செய்துள்ளான். இவன் தம்பி தனபாலசிங்கன் கோவிலைப் பராபரித்து வந்துள்ளான்.1591ல் அரசு கட்டிலேறிய புவிராசா மகன் எதிர்மன்னசிங்கன், பரராசசேகரன் என்ற பட்டப்பெயருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி செய்தான். இவன் 1615ல் இக்கோவிலைப் புதுப்பித்துக் கட்டினான். இதனால் தான் பரராசசேகரனால் பறாளை விநாயகர் கோவில் கட்டப்பெற்றது என்று வரலாறு கூறுகிறது. ஆலய பூசைகள் குறைவின்றி நிறைவு பெற வேண்டி சுழிபுர வயல்களிலிருந்து நெல் வரியை மக்கள் கோவிலுக்குச் செலுத்த வேண்டும் என்று எதிர்மன்ன பரராசசேகரன் ஆணை பிறப்பித்தான். மக்களும் அறுவடையின் போது முதலில் ஆலயத்திற்கு நெல்வரி செலுத்திய பின்னரே வயல்களிலிருந்து நெல்லை வீட்டிற்கு எடுத்துச் செல்வது வழக்கம். நல்லூரின் மன்னராட்சி மறைந்த பின்னரும் மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு மக்கள் நெல்வரியை ஆலய அறங்காவலர்கட்கு செலுத்தி வந்தார்கள்.

கயல்வ ரைந்த துவசன் பணிநவ
கண்டி மன்னன் பரராசசிங்க
னியல்பு டன்றிருச் செங்கோ னடாத்திய
வீழ மண்டல நாடெங்க ணாடே

மீன்கொடி பாண்டியனால் தொழப்பட்டவனும் சிறந்த கண்டி மன்னனுமான சிங்கை அரசன் பரராசசிங்கன் சிறப்புடன் திருச்செங்கோல் நடாத்திய ஈழமண்டல நாடு எங்கள் நாடு என்று சின்னத்தம்பிப் புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

1620ல் போர்த்துக்கீசர் நல்லூர் இராசதானியை ஆட்சி செய்த இரண்டாம் சங்கிலியை இராசமடப்பபள்ளியின் காக்கைத்தம்பி காட்டிக் கொடுக்க கைது செய்தனர். 1621ல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆட்சியை ஆரம்பித்ததுடன் யாழ்ப்பாண இராச்சியம் தோன்றியது.

போர்த்துக்கீசர் சைவக்கோவில்களை இடித்து தரைமட்ட மாக்கியதுடன் அவ்விடத்தில் அந்தக் கற்களைக் கொண்டே கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டி வந்தனர். நல்லூர் கந்தசாமி கோவிலை இடித்து அவ்விடத்தில் கத்தோலிக்க தேவாலயத்தைக் கட்டினார்கள்.

சேகர ராசவம்சத்தில் வந்த குலசேகரம் வைரமுத்து (பண்டார வன்னியன்) 1803 ல் ஆங்கியேரால் தோற்கடிக்கப் பட்டபின்னரும் அரசனாக இருந்து நாகநாட்டை (வன்னியை) மீட்க 1811 ல் இறக்கும் வரை போராடினான். அதுபோல போர்த்துக்கீசர் மணிபல்லவத்தைக் கைப்பற்றிய பின்னரும் நல்லூரின் சேகர ராசவம்சத்தவர்கள் நாட்டை மீட்பதற்கு தொடர்ந்தும் போராடி வந்தார்கள்.

அவ்வாறு போராடுவதற்காக இராச குடும்பத்தில் வீரம் விவேகம் துணிவு உள்ளவரை இலங்கைத் தமிழ்ராச்சியத்தின் வாரிசாக முடிசூட்டி வந்தார்கள். இராச குடும்பத்தவர்கள் கனவான்கள் பதினெண்குடி பெருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து மன்னருக்கு முடிசூட்டுவர். தமிழ் மக்கள் அம்மன்னனின் தலைமையில் இழந்த ராச்சியத்தை மீட்க போராடி வந்தார்கள்.முடிசூட்டிய இராசாவுக்கு மக்கள் விசுவாசமாக இருந்தார்கள். நாட்டின் இறைமை மன்னனிடமும் மக்களிடமும் தான் என்றும் இறைமையை இழக்காமல் பேணி வந்தார்கள்.

1650ம் ஆண்டளவில் போர்த்துக்கீசப் படை பறாளை விநாயகர் கோவிலை இடிக்க வந்த பொழுது அவர்களை எதிர்த்துப் போராடியவர் ராசா வை.குலசேகரன வாள் வேல் முதலிய ஆயுதங்களுடன் போராடியதால் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் குலசேகரன் மனமுருகி விநாயகரை வேண்டியதால் காகங்கள் பறந்து படையினரின் கண்களை காகங்கள் கொத்தியதால் கோவிலை இடிக்காது விட்டார்கள். இதன் பின்னர் மக்கள் காக்காய்ப்பிள்ளையார் கண்கொத்திப் பிள்ளையார் என அழைக்கின்றனர்.

1770ல் ஒல்லாந்தரின் தடையையும், கெடுபிடிகளையும், இடையூறுகளையும் மீறி அவற்றை முறியடித்து ராசா சு.குலசேகரன் 1790ல் சித்திரத் தேர் திருப்பணியை நிறைவு செய்தார்.

இருபதாம் நூற்றாண்டிலும் மன்னர்களால் நிறைவேற்றப்பட்டு வந்த நாளேர் அடித்தல், கலைஞர்கள் முதற் சேவகம் புரிதல், அரச விருதுகள் வழங்குதல், இராசவரிசைகள் எல்லாம் ராசா ஆறுமுகன் காலத்திலும் செய்யப்பட்டு வந்தன. மாதகல் மணியகாரன் இவருடைய நிலத்தை தமது பிரித்தானிய அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அபகரிக்க நினைத்தார். ராசா ஆறுமுகன் தமது படையினருடன் சென்று, வென்று, வெற்றியைக் கொண்டாடு முகமாக தமது படையினர் அறுபது பேருக்கும் ஒரு நிலத்தை அறுபது கத்திக்கார பள்ளவளவு என்று பெயரிட்டு பரிசாக அளித்தார்.தமக்கு சேவகம் புரிந்த நாட்டிய கலைஞர் தேவசேனைக்கு மாவிட்டபுரத்தில் 25 பரப்புக்காணியை பரிசாக அளித்தார். பிரித்தானிய அரசின் உடையார் வழக்கத்திற்கு மாறாக நாளேர் அடிக்க முனைந்தார்.அதை முறியடித்து உடையாரையும் அவர் உறவினர் நொத்தாரிசுவையும் கலப்பையில் பூட்டி அவ்வருடம் நாளேர் அடித்தார். பிரித்தானிய ஆட்சி அதிகாரத்தைச் செல்லாது நிறுத்தி மன்னராட்சியின் உரிமையையும் தமது இறையாண்மையையும் அதிகாரத்தையும் நிலை நாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரராச வம்சத்தவர்கள் தங்கள் பட்டத்திற்குரிய பெயராக பரராசசேகரன் செகராசசேகரன் குலசேகரன் என வைத்து வந்தது போல இவர்களும் இராசசேகரன் குலசேகரன் என்ற பெயர்களையே வைத்து வருகிறார்கள். 1910ம் ஆண்டு தை மாதம் பிரித்தானிய ஆட்சியினரின் அரச அதிபர் பிறைஸ் ராசா சுப்பிரமணியத்தின் வில்லுமாட்டு வண்டியை கைப்பற்ற முனைந்த போது அவர் தம் படையினரினதும் மக்களினதும் உதவியினால் பிறைஸைத் தோற்கடித்தார்.

அரச அதிபரின் அதிகாரத்தைச் செல்லுபடியற்றதாக்கினார். இதனால் மக்களின் விடுதலை உணர்வு விம்மியது. அவர் புது பொறிகளை வடிவமைத்தும் படைதிரட்டியும் போராடியதால், ராசா ஆறுமுகன் தமக்கு 90 வயதாகிவிட்டதாலும், தம்மக்களுக்கு 65 வயதாகிவிட்டதாலும், வெற்றி வாகை சூடிய சுப்பிரமணியத்தை 1911ல் தமிழ்ராச்சியத்தின் வாரிசாக முடி சூட்டினார்.

1912ல் பிரித்தானிய மகாதேசாதிபதியாக கொழும்பிலிருந்த மக்கலம் மூளாய் கனவான் ம.நி.சின்னப்பாவின் அழைப்பின் பேரில் அவரின் உறவினர் கதிரவேலு நொத்தாரிசு பட்டம் பெற்றதற்காக தலைப்பாகை சூட்டுவதற்கு மூளாய் வந்தார்.தம் படையினரதும் மக்களினதும் ஒத்துழைப்புடன் ராசா சுப்பிரமணியம் மகா தேசாதிபதி மக்கலத்தின் வரவேற்பினை தடுத்து நிறுத்தினார்.கொழும்பு தேசாதிபதியின் அதிகாரம் தமிழ்ராச்சிய மண்ணில் செல்லாது வந்த வழி திரும்பிச் செல்லும் வரவேற்பு விழா நடத்தவோ தலைப்பாகையை சூட்டவோ கூடாது என்று கூறி விழாவை நிற்பாட்டினார். தமிழ்ராச்சிய மண்ணில் இராச மரியாதையும் இராசவரிசைகளும் ராசாக்களாகிய எங்களுக்குத் தான் என்று நிலைநாட்டினார்.பிரித்தானிய கொடியை மேடையி லிருந்து இறக்கி பல்லவராச்சியத்தின் நந்திக்கொடியை ஏற்றிப் பறக்கவிட்டார். தலைப்பாகையை குணரத்தினத்திற்குச் சூட்டினார்.தமது அரசுரிமையையும் தமிழ்ராச்சியத்தின் இறைமையையும் நிலைநாட்டினார். இவருக்கு எதிராக பிரித்தானிய தேசாதிபதி நடவடிக்கை எடுத்த போது சேர்.பொன். இராமநாதன் தேசாதிபதிக்கு நிலைமையை விளங்க வைத்து இராணுவ நடவடிக்கையை விலக்கினார். தொடரப்பட்ட வழக்கில் சேர்.பொன்.இராமநாதன் இவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்து மக்களுக்கு பாதகமான நிலைமை ஏற்படாது காப்பாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசா சுப்பிரமணியம் காலத்திலும் மக்களால் இவருக்கு நெல்வரி செலுத்தப்பட்டு வந்தது.

1915ல் பறாளை விநாயகர் ஆலயம் புதிதாக கட்டி குடமுழுக்குச் செய்யும் பொழுது உடையாரும் சிலரும் குழப்பம் விளைவிக்க எண்ணியிருந்தனர். இதனை அறிந்த ராசா சுப்பிரமணியம் தமது இரதத்தில் வேகமாக சென்ற பொழுது சில்லுகளின் ஓசையால் நாடே அதிர்ந்தது, கிளம்பிய புழுதி வானை மறைத்தது, அவர் வீசிய சவுக்கின் ஓசை விண்ணை அதிர வைத்தது. குழப்பம் விளைவிக்க எண்ணியவர்கள் இவ்வோசை கேட்டு இடியோசை கேட்ட நாகம் போல கதிகலங்கி ஓடி ஒளிந்தனர். ராசா சுப்பிரமணியம் பறாளை ஐந்து முகனுக்கும் ஆதீனகர்த்தா ஆறுமுகனுக்கும் வெகு விமரிசையாக குடமுழுக்கினை நடாத்தி வைத்தார்.

இவர் காலத்திலும் தமிழ்ராச்சியத்திற்கு உட்பட்ட எல்லா கோவில் களிலும் பல்லவ ராசாக்களுக்கு மட்டுமல்ல ராசகுடும்ப பிரபுக்களுக்கும் முதல் மரியாதை வழங்கப்பட்டு வந்தது. தமது முப்பத்திரண்டாவது வயதில் 1920ல் இறக்கும் போது தமது மகன் கந்தசாமியை தமிழ்ராச்சியத்தின் முடிக்கு ரிய வாரிசாக நியமித்தார்.இராச வரிசைகளுடன் இறுதி மரியாதைகள் இடம் பெற்றன. இராசப்பிரபு கந்தசாமியும் தாம் இறக்கும்போது இராச குடும்ப த்தின் முடிக்குரிய வாரிசாக தமது மகன் பால சுப்பிரமணியத்தை நியமித்தார்.

பறாளை விநாயகர் வரலாறும் பல்லவ ராசாக்களின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த ஒன்றாகும். இராசப்பிரபுக்களான தனபால சிங்கனைத் தொடர்ந்து இராசசேகரன், தனிப்புலிசிங்கன், பரராசசிங்கன், சந்திரசேகர மானாமுதலி, கதிர்காமர், தனிப்புலிசிங்க முதலி, ஆகியோரால் தலைமுறை வழியாக ஆலயம் பராமரிக்கப்பட்டு வந்தது.

## தலச்சிறப்பு

ஆம்பலும் தாமரையும் மலருகின்றதும், மா பலா வாழை கமுகு கரும்புச் சோலைகள் சூழ்ந்ததும், சங்குகள் ஊர்கின்றதும், பவளக்கொடிகள் வளருகின்றதும், பயிர்கள் செழித்த கழனிகள் நிறைந்ததுமான சுழிபுரத்தில் இந்திரன் போல ராசா ஆறுமுகன் வாழ்ந்து வந்தார்.பசுவின் கழுத்துமணி ஓசையும, அன்னக்கூட்டத்தின் ஒலியும், புல்லாங்குழலின் ஒலியும், தமிழிசைஒலியும், சந்தன மரங்களின் எண்ணெயினால் ஈரந்தோய்ந்த தென்றலும் சூழ்ந்த மருதஞ் சோலையில் பறாளை விநாயகன் அற்புதங்களையும தலசிறப்புக்களையும் சொல்லால் வர்ணிக்க முடியாது. இராச ஆறுமுகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இராசா குலசேகரன் கி.பி. 1790 இல் இயற்றிய சித்திரத்தேர்ச் சிற்பங்களில் சில.




தேர்முட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசா எதிர் மன்ன பரராசசேகரன் கி.பி. 1615 இல் வெட்டிய திருமஞ்சன கிணறு



இராசா ஆறுமுகம் (பெரியபரிகாரியார்) 1915 இல் வெட்டிய திருமஞ்சன கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஆனி மாதம் கொடியேற்றப்பட்டு 10 நாட்கள் திருவிழாவும் ஆனி உத்தர நட்சத்திரத்தில் தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடந்து வந்தது.

## சித்திரத் தேர்

கலையழகும் சித்திரச் சிற்பங்களின் சிறப்பும் நிறைந்த ஈசுரவிநாயகன் தேர்த் திருப்பணியை ராசா சு.குலசேகரன் 18ம் நூற்றாண்டில் நிறைவேற்றினார். தேரினை நிறைவு செய்த பொழுது தேர் ஆகாயத்தில் எழும்பியதாகவும் சிற்பி சில்லினை உடைத்து நிலத்தில் இருத்தியதாகவும், பின் வெள்ளோட்டத்தின் போது அத்தேரின் சிற்பி குருவியாக பறந்துவிட்டதாகவும் கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது.

## பாடல் பெற்ற தலம்

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர் மீது பள்ளுப் பிரபந்தம் பாடியுள்ளார். சுழிபுர நகரின் சிறப்பையும், வேளாண்மையின் மகிமையையும், பரராசசேகர மன்னரின் சந்ததியினர் புகழையும், பாடியுள்ளார். பாடி முடிந்ததும் ராசா குலசேகரன் புலவருக்கு பொற்காசுகள் பரிசளித்தார். அவற்றிற் சில பாடல்கள்.

நாளுங் கலியைத் துரப்பதே யன்றி நாளை வாவென் றுரைத்திடான்
நம்பினோர்க் கருள்தரு தயாபரன் வெம்பி னேர்க்கரி யேறனான்
வாளின் றடக்கைச் சந்திர சேகர மானா முதலி வாழவே
..................................................

சோதியாகும் பரராசசேகரன் தன் குலத்
துதித்து நித்தம் பாரோர் பரவி ஏற்றிடும்
நீதிமன்னர் புகழ் அமரர் தொழ
நின்ற கதிர்காம சேகரக் கோனும்

திருவுலா புயத்தினன் வீரங் கொள்
தெரியல் சேருஞ் செழுமணி மார்பன்
தரும சீலன் சுப்பிரமணிய பிள்ளைத்
தண்டிகை சத்துருக் குலசேகரனும்

கதிக்கும் பைந்தமிழ் பாவலரைத் தினங்
காத்தவன் கலி தீர்த்தவன் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிக்கு பேரன் நிகர் செல்வன் காவலர் தொழ
நின்ற குலசேகர பூபதிதானும்

எண்டிசையும் புகழ் மணக்கும் ஏந்தல்
எம் கலியினை ஓட்டும் எங்கள் ஆண்டே
தண்டிகை குலசேகர பூபதியென்றே சொல்லும்
திருச்சேரீழ மண்டல பள்ளிநானே.

## புண்ணிய தீர்த்தம்

சுழிபுரத்தில் மீனவனாகப் பிறந்த இந்திரனுக்கு சாபநீக்கம் அளித்த மணிவண்ணன் பாதச்சுவடுகள் பதிந்த இடமே திருவடிநிலையாகும். இந்திரன் கேட்ட வரத்தினால் இத்தீர்த்தத்தில் நீராடுபவர்களின் எல்லாப் பாவங்களும் நீங்கி புண்ணியம் பெறுகின்றனர்.மணிவண்ணன் பாதங்கள் பதிந்ததால் மணி பல்லவம் என பெயர் பெற்றது. திருவடிநிலையில் வந்த பொன்னாமை கல்லாக மாறிய இடமே பொன்னாமையூர் இன்று மருவி பொன்னாலையூர் என்று அழைக்கப்படுகிறது.ஈசுரவிநாயகர் திருவடிநிலையிலே தீர்த்தமாடுவது விசேடம்.

## குலசேகரராசா சின்னத்தம்பி

பேரரசன் செகராசசேகரன் தலைமுறையில் வந்த குலசேகர ராசா மகன் சின்னத்தம்பி கி.பி. 1755 லிருந்து ஆலய பராமரிப்பாளராக இருந்தார். இவருடைய காலத்திலிருந்து வேதாரணியத்திலிருந்தும் சைவக் குருமார் ஆலய கருமங்களுக்கு நியமிக்கப்பட்டனர். கோவிலில் வடமொழியில் பூசைகளை முதலில் அவர்களே செய்து வந்தனர். தலைமுறை வழியாக மகன் சுப்பிரமணியம், வைரமுத்து, ஆறுமுகம் முறையே அறங்காவலர்களாக இருந்து பரிபாலித் துள்ளார்கள். கோவில் சிதிலமடைந்து போனதால் 1884ல் ராசா ஆறுமுகன் இடிக்க உத்தரவிட்டார். அப்பொழுது அவருக்கெதிராக ஒருவர் பொய்யான வழக்குத் தொடர்ந்தார். ஆயினும் அவர் வழக்கினை நடத்தாமலே இறந்து போனார்.

ஆலயம் முழுவதையும் இடித்த பின்னர் கோவிலைத் தவறான வழியில் அபகரிப்பதற்காக நன்னித்தம்பி 1889ல் வழக்கு தொடுத்தார். ஆறுமுகம் சமர்ப்பித்த ஆவணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் ஆலயம் அவருக்குச் சொந்தமானது உரிமையாளரும் முகாமையாளரும் அவரே என ஏற்று அவரை இடைநிறுத்தம் செய்யவில்லை.வழக்கு நீண்டு போனதாலும் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டும் வேலையை ஆரம்பிக்க வேண்டியிருந்ததாலும் ஆதினகர்த்தா ஆறுமுகம் தமக்குரிய அதிகாரத்தைக் கொண்டு கோவிலுக்கான செலவுகளில் பாதியை வழக்காளி தமக்குத் தந்தால் வழக்காளியை முகாமையாளர்களில் ஒருவராக தாம் சேர்த்துக் கொள்வதாகவும், தற்பொழுது தாம் செலவு செய்த ரூபா மூவாயிரத்தில் அரைவாசி ரூபா ஆயிரத்து ஐநூறையும் தந்து தொடர்ந்தும் ஏற்படும் செலவுகளில் அரைவாசியைத் தமக்குத் தரவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். வழக்காளி நிபந்தனையை ஏற்று இணங்கினார்.

நீதிமன்றமும் இணக்கத்தையே தீர்ப்பாக வழங்கியது. வழக்காளி நிபந்தனையை நிறைவேற்றாமல் முகாமையாளர்களுள் ஒருவராக சேர்க்கப்படாமலே ஓராண்டில் இறந்து போனார். இவை எல்லாம் விநாயகன் திருவிளையாடல்களே. பெரியபரிகாரியார் 1891 லிருந்து தமது சொந்தப் பணத்தையும் பொருட்களையும் செலவு செய்து வைரக் கற்களால் புதிய ஆலயத்தைக் கட்டி வரலானார். வழக்காளி இறக்கும் வரை ஒரு செப்புச் சல்லிகூட ஆதீனகர்த்தாவிடம் வழங்கவில்லை.

## அறக்கட்டளை

திருக்கோவில் பணிகள் சிறக்க ஆலயத்தை 1909ல் அறச்சொத்தாகப் பிரகடனப்படுத்தி அறக்கட்டளையை ஏற்படுத்தி அறங்காவலர்களாக தமது மக்கள் இருவரையும் தம்முடன் சேர்த்து மூவர் கொண்ட அறங்காவலர் சபையை அமைத்தார்.தமது சொந்த நிலங்கள் ஐந்தினை அறக்கட்டளைக்கு வழங்கினார். அறச்சொத்துக்களை அபகரிக்க நினைப்பது வேதனைக் குரியதாகும். அதில் தமது ஆண் சந்ததியினர் தொடர்ந்து தலைமுறைத் தத்துவமாக அறங் காவலர்களாகவும் முகாமையாளர்களாகவும் இருந்து ஆலயத்தைப் பராபரிக்க ஏற்பாடு செய்தார்.1912ல் சேர் பொன்.இராமநாதனின் பார்வைக் குறைவினை பெரியபரிகாரியார் ஆறுமுகம் சுகப்படுத்தினார். இராமநாதன் பறாளை விநாயகனைத் தொழுது ஆலயத்தைத் தாமே கட்டித்தர விரும்புவதாக விண்ணப்பித்தார்.பெரியவர் ஆறுமுகம் அதற்கு அனுமதிக்கவில்லை. இராமநாதன் நினைவாக விக்கிரக பீடத்தையும் கோமுகைக் கல்லையும் அவரிடமிருந்து பெற்று ஆலயத்தில் வைத்துக் கட்டினார். இராசா ஆறுமுகம் தமது பொருட்களையும் சொந்தப் பணத்தில் மொத்தமாக ரூபா பன்னீராயிரம் செலவு செய்து ஆலயத் திருப்பணியை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனார் மலர்ச்சோலை செழித்த சுழிபுரத்தில் சுந்தரம் சேர் பறாளைப் பதியினிலே ஈசுரவிநாயகருக்கு அழகிய ஆலயம் அமைத்தார்.விநாயகர் திருவருளால் 1915ல் இராட்சத வருடம் வைகாசி மாதம் 22ம் திகதி வெள்ளிக் கிழமை இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் ராசா சுப்பிரமணியம் சகல கருமங்களையும் தாமே முன்னின்று நடாத்தி வெகு விமரிசையாக குட முழுக்கினை நிறைவேற்றிவைத்தார். வேதாரணியத்தின் சைவக் குருமார்களினாலே குடமுழுக்கு கிரியைகள் செய்யப்பட்டது.

இதுவரை கோவில் கட்டிய செலவிலோ அல்லது பராபரிப்புச் செலவிலோ ஆதீன கர்த்தாவுக்கு வழக்காளி ஒரு சதமும் வழங்க வில்லை. 1909 லிருந்து அறங் காவலர்சபை அறக்கட்டளையைப் பராபரித்து வருகின்றது. ஆறுமுகன் ஐந்துமுகனுக்கு பெருங்கதைப் படிப்பு ஆரம்பித்து நடாத்தி வந்தார்.

## அறங்காவலர் சபை

ஆறுமுகம் இறந்த பின்னர் தம்பிப்பிள்ளைக்கும் வைரமுத்துவுக்கும் எதிராக 1917ல் சின்னையா என்பவர் வழக்குத் தொடர்ந்தார்.ஆலயத்தின் உரிமையாளர்கள் தம்பிப்பிள்ளையும் வைரமுத்துவும் தான் என்பதை நீதி மன்றம் ஏற்று முகாமையாளர் நியமனம் சம்பந்தமாக 1891ல் ஆறுமுகத்தின் நிபந்தனை வழக்காளியினால் நிறைவேற்றப்பட வில்லையாதலால் இணக்கத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த முடியாது எனத் தீர்ப்பு வழங்கியது.எனவே ஆதீனகர்த்தா இறக்கும் வரை அவருடன் இணக்கத்தீர்ப்பு நிபந்தனை வழக்காளியினால் நிறைவேற்றப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இராசப்பிரபுக்களான தம்பிப்பிள்ளை, வைரமுத்து, மூத்ததம்பி, சுப்பிரமணியம் 1917 லிருந்து அறங்காவலர் சபையாக ஆலயத்தைப் பரிபாலித்து வந்தார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பத்தாயிரம் செலவு செய்து கொட்டகைகளையும் சுற்று மதிலையும் மற்றைய திருப்பணிகளையும் 1920ல் நிறைவு செய்தனர். வருடம் ஒருவராக ஆலயத்தை பராமரித்தும் வந்தனர்.

இவர்களின் பின் 1925ல் குலசேகரம்பிள்ளை, பூலோகசுந்தரம், அப்புத்துரை, இராசா, கந்தசாமி, பாலச்சந்திரன், சுப்பிரமணியம, செல்வத்துரை, தனிப்புலிசிங்க முதலியார் ஒருமித்து அறங்காவலர்களாகவும் முகாமையாளர்களாகவும் பொறுப்பேற்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பதினையாயிரம் செலவு செய்து மடைப்பள்ளி களஞ்சியம் பூந்தோட்டம் முதலிய திருப்பணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றினார்கள். 1891லிருந்து அறுபது ஆண்டுகள் வழக்காளி குடும்பத்தினர் கோவிலுக்கு வரவில்லை. பெரிய பூலோகமும் குலசேகரம்பிள்ளையும் இறந்த பின்னர் சின்னையா அறக்கட்டளையை ஏற்று அறங்காவலர்களுடன் ஒத்துழைத்து முதலாம் திருவிழா உபயகாரரானார். கொடியேற்றம், முகாமை, ஆலய பரிபாலனம் அறங்காவலர் சபையினாலேயே நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1960 ஆம் ஆண்டு தொடக்கம் வ.த. முதலியார் எல்லா அறங்காவலர்களையும் ஒன்றாகச் சேர்த்து தமது தலைமையின் கீழ் ஒருமுகமாக பராமரித்தும் கொடியேற்றியும் வந்தார். 1965 இல் ஒரு அரசியல் குழு குழப்பம் விளைவிக்க முனைந்த போது கோவிலைப் பூட்டி திறப்பை தம்முடன் வைத்துக் கொண்டு குழப்பத்தை தவிர்த்தார். அவருடைய முயற்சியினால் தலைவர் முதலிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அவரே முதலாவது தலைவராக இருந்து 1990 வரை சபையை வழி நடாத்தி வந்தார்.

1981ல் அறங்காவலர் சபை தமது சொந்தப் பணத்தில் ரூபா முப்பத்திரண்டாயிரம் செலவு செய்து கோவிலைத் திருத்தி குடமுழுக்கை தலைவர் தனிப்புலிசிங்க முதலியார் நிறைவு செய்தார்.அடியார்களும் திருப்பணிகளை நிறைவேற்ற மேலதிகமாக உதவினார்கள்.அத்தருணத்தில் உபயகாரர் சி.சின்னத்துரை தானும் முகாமையாளராக வர முயற்சித்த படியால் அவருடைய உபயமும் பல வருடங்கள் நிறுத்தப்பட்டது. அறங்காவலர் தொகை கூடிக்கொண்டே போவதாலும் அறங்காவலர்கள் தனிப்போக்கில் செயற்படாது எல்லாரும் ஒருமுகமாக செயற்பட வேண்டும் என்பதற்காகவும் 1985ல் சபை 19 அறங்காவலர்களுடன் விளங்கியதாலும் தலைவர்,செயலாளர், பொருளாளர் பதவிகள், யாப்புவிதிகள் உருவாக்கப்பட்டு அறங்காவலர் சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றது.வ.த.முதலியார் தலைவராகவும், பாலசுப்பிரமணியம் செயலாளராகவும், கயிலாயநாதன் பொருளாளராகவும் 1985 லிருந்து பணியாற்றினார்கள். ஆலய பரிபாலனம், உபயங்கள், திருப்பணி முதலிய ஆலய சம்பந்தமான சகல விடயங்களிலும் அறங்காவலர் சபையின் தீர்மானமே தீர்ப்பாகும் என்பதை 1988ல் அறங்காவலர் சபையால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. அறங்காவலர் சபையின் அனுமதியின்றி செய்யப்படும் எந்த விடயமும் சட்டவிரோதமாகும். காலத்திற்கு காலம் அறக்கட்டளைப்படி, அறங்காவலர்கள் சபையினால் நியமிக்கப்பெறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988.6.7 ல் அறங்காவலர் சபைத் தலைவர் வ.த. முதலியாரின் விருப்பத்திற்கு மாறாக அவரை உதாசீனம் செய்து பூ.கயிலாயநாதன், உபயம் செய்யாது நிறுத்தப்பட்ட சி.சின்னத்துரையுடன் சேர்ந்து திருப்பணிச் சபை வைப்பதற்கு முயற்சித்தார். அப்பொழுது, ஆலயத்தை உரிமைக்காரரான அறங்காவலர் சபையே பரிபாலனம் செய்து வருகிறது. கயிலாயநாதனும் சின்னத்துரையும் முகாமையாளர்களல்ல. அவர்கள் சபை வைக்க முடியாது. அறங்காவலர் சபையை மீறி செயற்பட்டால் எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சபை அறிவித்தது. 25.6.88 ல் கூட்டத்தைக் கூட்ட முற்பட்டபொழுது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் பிரபல சட்டத்தரணியுமான திரு சங்கரப்பிள்ளை அறங்காவலர் சபையின் அறிவித்தலை கூட்டத்தினருக்கு காட்டி சின்னத்துரைக்கு எந்த உரிமையும் இல்லை அவர் முகாமையாளரும் இல்லை எந்த வழக்குத் தீர்ப்பிலும் அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்படவில்லை. 1917ல் ஆறுமுகத்தின் இணக்கத்தீர்ப்பு நிபந்தனை நிறைவேற்றப்படவில்லை ஆதலால் இணக்கத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்த முடியாது என்று தீர்ப்பு வழங்கியது என்றும் அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. எனவே எந்த ஆண்டில் உங்களுக்கு முகாமையாளர் பதவி என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்று சின்னத்துரையிடம் வினவினார். சின்னத்துரையால் சரியாக பதில் கூறமுடியவில்லை. எந்த ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று கூற முடியவில்லை.அப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் தானே கூறமுடியும். இப்படியான கூட்டங்களை சின்னத்துரையோ கயிலாயநாதனோ வைக்க முடியாது. சட்ட விரோதமான இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றினால் எங்களுக்கு எதிராகவும் அறங்காவலர் சபை நடவடிக்கை எடுக்கலாம்.எனவே நான் கூட்டத்தில் கலந்து கொள்ளாது வெளியேறுகின்றேன் என்று கூறி வெளிநடப்புச் செய்தார். சின்னத்துரையும் கூட்டத்தினரும் அதை ஏற்று வெளியேறினார்கள். கூட்டம் நடக்கவில்லை. அறிவிலித்தனமாக மீண்டும் சட்டவிரோதமாக கூடி செயற்பட்டால் விநாயகன் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. முகாமையாளர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்று பொய்யாக கூறி ஆண்டவனையும் மக்களையும் மீண்டும் ஏமாற்ற முயற்சிப்பது குளிக்கப் போய் சேறு பூசிய கதையாகும். 1884, 1891, 1917, 1988, 1993, 1995 விசாரணைகளில் எந்த உரிமையும் எவர்க்கும் இல்லை என்று முடிவாகியும் புரிந்து கொள்ளாத ஆன்மாக்கள் ஞானம் பெறுவது எப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ம் ஆண்டு இடம் பெற்ற அசம்பாவிதத்தின் போது ஆடி மாதம் ஒன்பதாம் திகதி அறங்காவலர்கள் சகிதம் செயலாளர் பேரறிஞர் க. பால சுப்பிரமணியத்தினால் பறாளை விநாயகனுக்கு அநுருத்த குடமுழுக்கு நிறைவேற்றப்பட்டது. அறக்கட்டளையில் சொல்லப்படாததும் அடியார்களால் காணிக்கையாக்கப்பட்டதும் மேலும் ஐந்து நிலங்கள் உண்டு. இவற்றை சிலர் மறைத்து வருவதற்கும் அறக்கட்டளைக் காணிகள் சரியாக நிர்வகிக்கப்படாது இருப்பதற்கும் குறித்த அறங்காவலரால் செய்யப்படும் பொறுப்பற்ற நடவடிக்கைகளே காரணமாகும். தற்பொழுது பதினைந்து பேர் அறங்காவலர்களாக உள்ளனர். அவர்களே ஆலய அறங்காவலர்களாகவும் உரிமையாளர்களாகவும் சபையில் செயலாற்றுகின்றனர். அறங்காவலர் சபை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளைச் சட்டப்படி அறங்காவலர்கள் தங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.ஆலய கருமங்களில் தேவையின்றி தலையிடுபவர்களுக்கும் அறச்சொத்துக்களில் சுரண்ட நினைப்பவர்களுக்கும் எதிராக அறங்காவலர்சபை நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்பதனால் தவறான நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்வது நல்லது. 1981ல் சமூக ஏற்றத் தாழ்வினைக் கூறி குழப்பம் விளைவிக்க சிலர் முயன்ற போது அமைதியை நிலைநாட்டியவர் பாலசுப்பிர மணியம். ஆலய அறங்காவலர் சபைக்கும், தலைவர் திரு.செ.மயில்வாகனத்திற்கும் செயலாளர் பேரறிஞர் பாலசுப்பிரமணியத்திற்கும் எதிராக திரு.கு.செல்வத்துரை என்பவரால் கயிலா யநாதனை முகாமையாளர் ஆக்குவதற்காக 1995ல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கும் தோல்வியில் முடிந்ததுடன் முகாமையாளர் என்று கோவிலில் யாரும் இல்லை ஆலயத்தை பராமரிக்கும் உரிமையும் கோவில் சார்பாக வரலாற்று நூல் வெளியிடும் உரிமையும் அறங்காவலர் சபைக்கே உண்டு. சபையின் சார்பாக மயில்வாகனமும் பாலசுப்பிரமணியமும் தொடர்ந்து பராமரித்து வருகின்றார்கள் என்றும் தெரிவித்தது, விநாயகர் திருவிளையாடல்களாகும். அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்ற சான்றோர் மொழி பொய்யாவதில்லை. 2000ம் ஆண்டில் அறங்காவலர் சபை துணைச் செயலாளர் திரு.பூ.வைத்தியநாதன் அறங்காவலர் சபை சார்பில் கொடியேற்றி மகோற்சவத்தை நிறைவேற்றினார். சிறப்பு மிக்க பல்லவ பேரரசர்களான பரராசசேகரன் செகராச சேகரன் வழி வந்தவர் பெரியபரிகாரியார் ஆறுமுகம். சட்டரீதியாக பறாளை விநாயகர் ஆலயம் ஆறுமுகம் சந்ததிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையானது முகாமையாளர்களையோ உபயகார்களையோ குருமார் களையோ ஊழியர்களையோ துணையான சபைகளையோ நியமிக்கவும் நீக்கவும் அறங்காவலர் சபை தத்துவமுடையது என்பதை நீதிமன்றத் தீர்ப்புக்களி லிருந்து அறிந்துகொள்ள வேண்டும்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்.

## அறங்காவலர் சபை

(பதிவு இலக்கம் - எச் ஏ/5/ஜே.ஏ/111 )

| | |
|---|---|
| திரு.செ.மயில்வாகனம் | தலைவர் |
| திரு.பூ.பத்மநாதன் | துணைத்தலைவர் |
| திரு.சு.இராசசேகரம் | துணைத்தலைவர் |
| பேரறிஞர் வைத்திய கலாநிதி. க.பாலசுப்பிரமணியம் | கௌரவ செயலாளர் |
| திரு.அ.சிவகாந்தா | பொருளாளர் |
| வைத்தியாச்சாரி பூ.நாகநாதன் | உறுப்பினர் |
| வைத்திய கலாநிதி பூ.கயிலாயநாதன் | உறுப்பினர் |
| திரு.அ.சிவச்சந்திரன் | உறுப்பினர் |
| திரு.க.நடேந்திரா | உறுப்பினர் |
| திரு.பா.சாந்திக்குமார் | உறுப்பினர் |
| திரு.பா.சிவானந்தா | உறுப்பினர் |
| திரு.பா.ஆனந்தக்குமார் | உறுப்பினர் |
| திரு.பா.இந்திரக்குமார் | உறுப்பினர் |
| திரு.பா.உருத்திரக்குமார் | உறுப்பினர் |
| திரு.பா.சூரியக்குமார் | உறுப்பினர் |

இவர்களைத் தவிர வேறு யாரையும் அறங்காவலர் சபை எந்தப் பதவியிலும் நியமிக்கவில்லை.

## தேவரை மதியாத பூனைகள்

கலியுகத்தில் மக்களுடைய புத்தி தவறான வழியில் செல்வதனால் அவர்களுடைய வாழ்க்கையும் தவறான வழியிலேயே செல்கிறது. இன்று அன்பு, ஆதரவு, இன்சொல், ஈகை எல்லாம் அருகி வருகின்றன. பூனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை மூடிக்கொண்டு பால் குடித்தால் தன்னை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று நினைப்பது போல சிலர் குடமுழுக்கின் போது நடந்து கொண்டது கண்டிக்கத்தக்கது. அறங்காவலர் சபையில் கயிலாயநாதன் பதினைந்து அறங்காவலர்களில் ஒருவராவர். எனவே அவருக்கு பதினைந்தில் ஒரு பங்கு உரிமையே உரித்தானது. அறக்கட்டளைக்கு முரணாக நிர்வாகி என்றும் முகாமையாளர் என்றும் சபையில் இல்லாத பதவிகளையும் அறங்காவலர் அல்லாதவர்களை அறங்காவலர் என்றும் அறிவித்தலில் தெரிவித்துள்ளது சட்டபடி குற்றமாகும். அறங்காவலர் இல்லாத த.உலகநாதனையும் க.சண்முகராசாவையும் அறங்காவலர் என்றும் நிர்வாகி என்றும் பிரசுரித்தது சட்டவிரோதமானது. ஆதீனகர்த்தாவின் சந்ததியில் வராத சண்முகராசாவை அறங்காவலர் என போட்டது அறக்கட்டளைச் சட்டப்படி குற்றமாகும். அறங்காவலர் ஒருவர் இறந்து விட்டால் அவரின் இடத்திற்கு ஒருவரை நியமிக்கும் அதிகாரம் சபைக்கே உண்டு. அறங்காவலர் சபையின் ஒழுங்கு விதிகளை மீறி மாறாக நடந்து கொண்டது. அறங்காவலர்களைப் புறந்தள்ளிவிட்டு தனித்து செயற்பட்டது குற்றமாகும். உலகநாதனோ அல்லது சண்முக ராசாவோ அறங்காவலர்களோ, நிர்வாகிகளோ அல்ல. ஆதலால் அவர்கள் அவ்வாறு செயற்பட முடியாது. அவ்வாறு அறிவித்ததே பெருந் தவறாகும். அறக்கட்டளையில் கோவில் உரிமைகளை பணத்திற்கு விற்க ஆதீனகர்த்தா வகை செய்ய வில்லை. காசு கொடுத்து அறக்கட்டளையின் உரிமையை யாரும் வாங்க முடியாது. அறச்சொத்துக்களை யாரும் காசுக்கு விற்கவும் முடியாது. கோவிலுக்கு பணம் கொடுத்து யாரும் அறங்காவலர்களாகவோ அல்லது நிர்வாகிகளாகவோ வர முடியாது. ராசா ஆறுமுகன் தமது சொந்தப் பணத்தில், தமது சொந்த நிலத்தில், கட்டி அறச்சொத்தாக்கிய ஆலயத்திற்கு, அவரின் சந்ததியில் வராத எவரும் உரிமை கோர முடியாது. ஆதீனகர்த்தாவையும் அறக்கட்டளையும் அவமதித்து அதனைக் குலைக்கும் வகையில் குந்தகமாக ஏனைய அறங்காவலர்களை மிரட்டி சபையைக் குழப்பி அவர்களை தமது கடமைகளை செய்யாது தடுத்து அவர்களின் உரிமைகளை மறுத்து தவறான முறையில் எல்லாம் நடைபெற்றுள்ளன. செயலாளர் துடக்கு காரணமாக கலந்துகொள்ள முடியாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துரோகம் இழைத்து விட்டார்கள். அறச்சொத்துக்களை தவறான வழியில் அபகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். இதற்கு சில அரச உத்தியோகத்தர்கள் தவறான வழியைக் காட்டியும் துணைபோயுமுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங் காவலர் சபையின் முயற்சியினால் சேகரித்த பணத்திற்கு கயிலாயநாதன் கணக்கு ஒப்படைக்கவில்லை.தவறுகள் செய்வதும் பின்னர் ஒத்துழைத்து அறங்காவலர் சபைக்கு விசுவாசமாக நடப்பதாக தெரிவித்து ஒற்றுமையாவதும் இது முதல் தடவையல்ல. 1995ல் இவர் ஆதரவில் அறங்காவலர் சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தோல்வி அடைந்தும் ஞானம் வரவில்லை. உண்மைக்கு மாறான கதைகளைக் கூறி தவறான முறையில் யாரும் அறச்சொத்துக்களை அபகரிக்க ஆனைமுகனும் விடமாட்டார் அறங்காவலர் சபையும் அதனை அனுமதிக்கமாட்டது. அறச் சொத்துக்களுக்கு ஆசைப்படுவதும் அபகரிக்க முயற்சிப்பதும் விநாயகருக்கு இழைக்கப்படும் பாவங்களாகும். அறங்காவலர் ஒருவர் அறக்கட்டளைக்கும் அறங்காவலர் சபைக்கும் முரணாக நடக்கும் போது தாமாவே தமது உரிமைகளை இழக்கிறார். அறக் கட்டளைக்கு எதிராக செயற்படுபவர் அறங்காவலராக இருக்கும் தகுதியை இழக்கிறார். தேள் கொட்டுவதும் துறவி காப்பாற்றுவதும் பிறவிக் குணங்களாகும். பிறவிக் குணங்களை மாற்ற விநாயகராலும் முடியாது. புண்ணியத்தைச் செய்யுங்கள் பாவத்தைத் தவிருங்கள். பக்தி பகல்வேடம் ஆகிவிடக் கூடாது. ஆலயத்தில் ஆசாரத்துடன் எல்லாரும் வழிபடலாம். நிர்வாக கடமைகளில் தலையிடுவதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் அவரை
ஆந்தனையும் காப்பர் சான்றேர். - முதுமொழி.

ஆன்மாக்கள் சிவபுண்ணியத்தை செய்வதற்காகவே ஆலயங்களைக் கட்டிவைத்தார்கள். ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்பது ஞானிகள் வாக்கு.

## வழியில் தேங்காயை எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு அடித்தல்

அறங்காவலர் சபை ஆலயத்தில் திருப்பணிகளை நிறைவேற்ற விரும்பும் அடியார்களுக்கு உதவ எப்பொழுதும் தயாராக உள்ளது. ஆலயத்தில் தேர்த் திருப்பணிச்சபை முன்பு கயிலாயநாதனால் தன்னுடைய தலைமையில் நியமிக்க முற்பட்ட பொழுது அது அறங்காவலர் சபையால் கலைக்கப்பட்டது. அறங்காவலர் சபை எவருக்கும் ஆலயம் சார்பாகப் பணம் திரட்ட அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க வில்லை. ஆலயம் சார்பாகவோ, ஆலயத்தின் தேரின் பெயராலோ, நிதி சேகரிப்பது சட்ட விரோதமாகும். சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடவேண்டாம். சட்டப்பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு விநாயகர் பெயரால் கேட்டுக்கொள்கிறோம். அறங்காவலர் கயிலாயநாதன் சட்டத்திற்கு முரணான சபைகளில் பங்கு பற்றுவது அறக்கட்டளைக்கு விரோதமாகும்.

அறங்காவலர் சபையின் அனுமதியின்றி ஆலய வளாகத்தில் செயற்படுவது இந்து கோவில் சட்டப்படி குற்றமாகும். அறிவித்தலை மீறி பணம் சேகரிப்பவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அறக் கட்டளையில் பொது மக்களிடம் நிதி சேகரிப்பது அனுமதிக்கப்படவில்லை. சேர். போன் இராமநாதன் பெரிய பரிகாரியாருக்கு நன்றிக் கடனாக ஆலயம் முழுவதையும் தன் செலவில் கட்டிக் கொடுக்க முன்வந்த பொழுது அதனை ஏற்றுக் கொள்ளாதவர் பெரியவர். பொதுமக்கள் ஆலயத்திற்கு நன்கொடை அளிக்க விரும்பினால் ஆலய வங்கிக் கணக்கில் (யாழ்ப்பாணம் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை - இல 207 032959) செலுத்தலாம். அனுமதிக்கப் படாதவர்களிடம் செலுத்தப்படும் பணத்திற்கு நாம் பொறுப்பாளிகளல்லர். வழியில் தேங்காயை எடுத்து பிள்ளையாருக்கு அடிப்பதற்கு யாரும் தேவையில்லை.

தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார்.
அவஞ் செய்வார் ஆசை உட்பட்டு

என்ற வாக்கிற்கிணங்க ஆசைவயப்பட்டு அவம் செய்து அல்லல் படாமல் தத்தம் கருமங்களை செய்து தவம் செய்வது அவர்களுக்கும் நல்லது எல்லாருக்கும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

ஆலயத்தனை புதுப்பிக்க நிதி வழங்கிய ராசா ஆறுமுகன் குடும்பத்தி னருக்கும், தமது பக்திக்காக திருப்பணிகளை நிறைவேற்றியவர் களுக்கும், அபிசேகங்களில் பங்கு கொண்டு உபயங்களை செய்தவர்களுக்கும் கருமங்களை சிறப்பாக செய்த சிவாச்சாரியார்களுக்கும், குறித்த காலத்தில் சிற்ப வேலைகளை நிறைவு செய்த சிற்பி யோகீஸ்வரன் அவர்களுக்கும், அடியவர்களுக்கும் ஆலயத்தின் சார்பாக அறங்காவலர் சபையினர் தமது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றார்கள்.

யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லால் வேறொன்றறியேன் பராபரமே.

வித்தக விநாயகன் விரைகழல் சரணே!

**அறங்காவலர் சபை**



சேர் பொன்.இராமநாதன், பிரபு ஆறுமுகத்திற்கு 1912 ல் வழங்கிய ஆலய கோமுகைக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org